# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 023/ந/2018

ஆணை எண். 73/2018

நாள் : 27/03/2018

**08.02.2018 நாளிட்ட**
**தினமலர் நாளிதழ் செய்தி** – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

**நகராட்சி ஆணையர்,**
**பம்மல் நகராட்சி,**
**பம்மல், சென்னை –78.** – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் நகராட்சி ஆணையருக்கு எதிராக அந்நகரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் உள்ள செய்தியினைக் குறிப்பிட்டு "குப்பையிலும் கொள்ளை; கொசுவிலும் கொள்ளை " என்று தலைப்பிட்டு தினமலர் நாளிதழ் 08.02.2018 அன்று செய்தி வெளியிட்டிருந்தது. இம்முறைமன்ற நடுவம், மேற்குறிப்பிட்ட செய்தியினை, தாமாகவே முறையீட்டு மனுவாக ஏற்று, 23/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தி குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் நகராட்சிப் பகுதியில், பசுமை உரக்குடில் ஒன்றினை அமைப்பதற்காக அப்பகுதியில் உள்ள விளையாட்டுத் திடலில் பகுதி நிலத்தினை தேர்வு செய்து, பணியினை மேற்கொள்வதற்காக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 13.09.2017 நாளிட்ட தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினைத் தொடர்ந்து, இப்பணியினை மேற்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண்.26581/2017 மற்றும் நீதிப்பேராணை பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட வழக்கு எண்களை பரிசீலனை செய்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 22.01.2018 அன்று கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

> "........that only a meager portion of the play ground is required for setting up of micro compost yard, this Court finds no reasons to interfere with the impugned tender notice published by the first respondent / municipality "

மேற்குறிப்பிட்ட பசுமை உரக்குடிலை அமைப்பதற்கு பல்லவபுரம் நகராட்சி மேற்கொண்ட நடவடிக்கை மற்றும் அத்திட்டப் பணியைத் தொடங்குவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை வழக்குகள் தாக்கல் செய்தது ஆகிய செயல்களை நோக்குகையில், சீரிய பசுமை உரக்குடில் திட்டத்தை தடைப்படுத்துவதற்கும், நகராட்சி ஆணையர் மீதான செயல்களுக்கு களங்கம் பிறப்பிக்கும் வகையிலேயே மேற்குறிப்பிட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்பதை இம்முறைமன்ற நடுவம் கருத நேரிடுகிறது. மேலும், சுவரொட்டிகளில் நகராட்சியின் பொறியாளர் மற்றும் பிற அலுவலர்கள் குறித்து குறிப்பிடப்படாததும், மேற்படித் திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ள நகராட்சியின் செயல்பாட்டினை எதிர்க்கும் சில நபர்களின் தூண்டுதலினாலேயே இதுபோன்ற சுவரொட்டி எதிர்ப்புகள் தோன்றியுள்ளதாகத் தெரிகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் முன்னாள் மாமன்ற உறுப்பினர்களும் நகராட்சி ஆணையருக்கு ஆதரவானக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். மேலும், நகராட்சி ஆணையருக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட பின்பும் கூட, நகராட்சி ஆணையரை இடமாறுதல் செய்யும் நடவடிக்கை எதுவும் இல்லை என முதலமைச்சரின் தனிப்பிரிவிற்குத் தெரிவித்துள்ளார். எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், **27–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 3.4.18

2.4.18

3/4/18

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
பம்மல் நகராட்சி,
பம்மல்,
சென்னை – 600 075.

2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
தாம்பரம், சென்னை – 600 045.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்